பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
12 07 2024 **SATURDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி உட்பட ஏழு மாநிலங்களில் 13 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.
- தமிழகத்தில் ஜவுளித் துறையில் முதலீடு செய்ய தைவான் முதலீட்டாளர்கள் ஆர்வத்துடன் உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- கர்நாடகாவிலிருந்து காவிரி நீரை பெற்றுத்தர தமிழக அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.
- நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று ஹராரேயில் நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

காலை எட்டு மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது.

முதலில் அஞ்சல் வாக்குகளும், அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும் எண்ணப்படும்.

இந்த வாக்கு எண்ணிக்கை 20 சுற்றுகளாக நடைபெறவுள்ளது.150-க்கும் மேற்பட்டோர் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வாக்கு எண்ணும் மையத்தில் சுமார் ஆயிரத்து 200-க்கும் மேற்பட்ட காவலர்கள் மற்றும் மத்திய துணை காவல் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதைத்தவிர, 6 மாநிலங்களுக்கு உட்பட்ட 12 சட்டப்பேரவை தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளும் இன்று எண்ணப்படவுள்ளன.

மேற்கு வங்கத்தில் நான்கு மக்களவைத் தொகுதிகளிலும், ஹிமாச்சலப்பிரதேசத்தில் சட்டப்பேரவை தொகுதிகளிலும், உத்தராகண்ட்டில் இரண்டு தொகுதிகளிலும், பீகார், மத்தியப்பிரதேசம், மற்றும் பஞ்சாபில் தலா ஒரு தொகுதியிலும் இடைத்தேர்தல் நடைபெற்றது.

>>>>><<<<<

தமிழகத்தில் ஜவுளித் துறையில் முதலீடு செய்ய தைவான் முதலீட்டாளர்கள் ஆர்வத்துடன் உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்ற தைவான் முதலீட்டாளர்கள், தமிழகத்தில் ஜவுளித்துறையில் முதலீடு ஆர்வம் காட்டியதாகவும், இதன் தொடர்ச்சியாக 10 பேர் கொண்ட தைவான் பிரதிநிதிகள் குழு கோவையில் நூற்பாலைகளை சமீபத்தில் பார்வையிட்டதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ஜவுளி உற்பத்திக் கூடங்களில் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதில், கூட்டாக செயல்படுவது குறித்தும், அதற்கான வாய்ப்புகள் குறித்து தைவான் குழுவினர் ஆய்வு செய்ததாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

தைவான் குழுவினர், நேற்று சென்னையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை, சிறு குறு, நடுத்தர தொழில்துறை மற்றும் தொழில்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

கர்நாடகாவிலிருந்து காவிரி நீரை பெற்றுத்தர தமிழக அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

காவிரியில் நாளொன்றுக்கு ஒரு டிஎம்சி வீதம் இம்மாதம் 31ஆம் தேதிவரை தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று காவிரி ஒழுங்காற்றுக் குழு பிறப்பித்த உத்தரவை கர்நாடக அரசு ஏற்க மறுப்பது கண்டனத்திற்குரியது என்றும் அவர் சமூகவலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவை கர்நாடக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை கேட்டுக் கொண்டுள்ளார்.

குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணை திறக்கப்படாததன் காரணத்தால், டெல்டா விசாயிகள் நிலத்தடி நீரை பயன்படுத்தி கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடக அரசு இம்மாத இறுதிவரை நாளொன்றுக்கு ஒரு டிஎம்சி வீதம் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவை அம்மாநில அரசு ஏற்க மறுப்பது சரியல்ல என்றும் அறிக்கை ஒன்றில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<

ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டு திட்டத்தின் பலன்கள் சமூகத்தில் மருத்துவ உதவி பெறமுடியாத நிலையில் உள்ள அனைவருக்கும் கிடைப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா கேட்டுக் கொண்டுள்ளார்.

இத்திட்டம் மற்றும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் தொடர்பாக நேற்று புதுதில்லியில் தேசிய சுகாதார ஆணையத்தின் அதிகாரிகளிடம் அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

இந்த திட்டங்களின் நோக்கங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருவதாகவும், நேற்றைய நிலவரப்படி நாடுமுழுவதும் 34 கோடியே 7 லட்சம் சுகாதார காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 7 கோடியே 35 லட்சம் பேர் இத்திட்டத்தின் கீழ், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்கு, ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகி வரும் தடகள வீரர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தரும் என்று மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகி வரும் இந்திய அணியினருக்கு செய்து தர வேண்டிய வசதிகள் தொடர்பாக, இந்திய ஒலிம்பிக் சங்கம், இந்திய விளையாட்டு ஆணைய உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

விளையாட்டுத் துறையில், அனைத்து அமைப்புகளும் ஒருங்கிணைந்து பணியாற்றி, பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு செல்லும் இந்திய தடகள வீரர் மற்றும் வீராங்கனைகள் அனைவருக்கும் தேவையான வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் இளநிலை கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான தரவரிசை பட்டியல் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என்று பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. செல்வக்குமார் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் – செல்வக்குமார் 60 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

குற்றால அருவிகளில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், பாதுகாப்பு கருதி சுற்றுலாப் பயணிகள் அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் குற்றால சீசன் தொடங்கியதிலிருந்து பிரதான அருவி, பழைய குற்றாலம், புலியருவி, ஐந்தருவி, சிற்றருவி உள்ளிட்ட அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளித்து மகிழ்ந்து வந்தனர்.

இந்த ஆண்டு பருவமழை முன்கூட்டியே தொடங்கியதால், அனைத்து அருவிகளிலும் நீர்வரத்து அதிகமாக இருந்ததால், சுற்றுலாப் பயணிகள் வருகையும் அதிகரித்து காணப்பட்டது.

இந்நிலையில் நேற்று மாலை மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த திடீர் மழை காரணமாக, பிரதான அருவி, ஐந்தருவிகளில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டதால், பாதுகாப்பு கருதி அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க காவல்துறையினர் தடை விதித்துள்ளனர்.

>>>>><<<<<

மேற்குதிசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இந்த நிலையில், சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் நேற்றிரவு சுமார் ஒரு மணி நேரம இடிமின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

இதன் காரணமாக, சென்னையில் வெப்பம் தணிந்து குளிச்சியான சூழல் நிலவுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் நேற்று நத்தம், பள்ளப்பட்டி உட்பட பல்வேறு பகுதிகளில் சுமார் ஒரு மணிநேரம் கனமழை பெய்ததால், தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி நின்றது.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

பிரிக்ஸ் நாடுகளின் நாடாளுமன்ற அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்க செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சென்றுள்ள மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, பல்வேறு நாடுகளின் சபாநாயகர்களை சந்தித்து பேசினார்.

>>>>><<<<<

கோதுமை இறக்குமதிக்கும், கோதுமை மாவு ஏற்றுமதிக்கும் பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மும்பையில் சாலை, ரயில்வே, துறைமுகம் உள்ளிட்ட சுமார் 29 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை தொடங்கி வைப்பதோடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

>>>>><<<<<

புதுதில்லியில் உலக ஒலி ஒளி மற்றும் பொழுதுபோக்கு உச்சிமாநாட்டின் முன்னோட்ட நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

>>>>><<<<<

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட புதுப்பாளையத்தில் முடிவுற்ற திட்டப் பணிகளை மாநில அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

சென்னை – மஸ்கட் இடையே மேலும் ஒரு விமான நிறுவனத்தின் நேரடி விமான சேவை தொடங்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மெட்ரோ ரயில் திட்டப் பணி காரணமாக, சென்னை மேடவாக்கம், மடிப்பாக்கம் பகுதியில் இன்றும் நாளையும் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்தி

இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டி ஹராரே-யில் இன்று மாலை மணி 4.30-க்கு தொடங்கவுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் முதல் போட்டியில் ஜிம்பாப்வே வெற்றி பெற்றது.

இருப்பினும், டிவென்டி டிவென்டி போட்டியில் உலக சாம்பியனான இந்தியா, அடுத்த இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று முன்னிலை பெற்றது.

நான்காவது போட்டி இன்று நடைபெறவுள்ள நிலையில், நாளை கடைசிப் போட்டி நடைபெறவுள்ளது.

>>>>><<<<<